பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 22 (4—6—68) செவ்வாய் ★ வெளியூர் : வைகாசி 23 (5—6—68) புதன் [இதழ் : 294

எழுபத்தைந்திலும் இயலாது ?

புதுடில்லி, ஜூன் 4—

"உருவாக்கப்பட்டுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அனுகும் போக்கிலிருந்து 1975-ல், 'மக்களுக்குக் குறைந்த வாழ்க்கைத்தரம்' என்ற இலக்கு நிறைவேறுவது இயலாத ஒன்றாகவே தெரிகிறது!"

--வி. கே. ஆர். வி. ராவ்
(மத்திய அமைச்சர்)

மொரார்ஜி இந்தித் திணிப்பு வாதம்!

தமிழகக் காங்கிரசாருக்குத் 'தூபம்' போடுகிறார்!

இணைப்பு மொழியாக்குவதற்கு நாள் குறிப்பிடுவதுதான் பாக்கியாம்

பஞ்சாலைப் பிரச்சினையில் டில்லி முழுப் பொறுப்பேற்காதாம்

புதுடில்லி ஜூன் 4—

"இந்தி மொழிப் பிரச்சினையில் தமிழகத்திலுள்ள காங்கிரசார் ஆதரவளிப்பார்களானால் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியை இணைப்பு மொழியாக்குவது மிகச் சுலபமாக இருக்கும்"

என்று இந்தியத் துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், தமிழகத்தைச் சார்ந்த காங்கிரசுத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினார்.

"இந்தி மொழி ஏற்கனவே, இந்தியா முழுவதும் இணைப்பு மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டு விட்டதால், இந்த முடிவிலிருந்து பின்வாங்கக்கூடாது ; எனவே, இந்தி மொழியை எந்தக் காலத்திற்குள் கொண்டு வருவது என்பது பற்றிய விவாதமே தற்போது பயனளிக்கக் கூடியதாக இருக்கும்"

என்றும் திரு. மொரார்ஜி தேசாய், அனைத்திந்திய காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த தமிழக உறுப்பினர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தற்போது நெருக்கடியான நிலையிலுள்ள பஞ்சாலைகள் பற்றிய பிரச்சினைகள் குறித்தும் இக்கூட்டத்தில் பேசப்பட்டது.

"இந்த ஆலைகளுக்குத் தேவையான நிதி வசதிகளை மத்திய அரசு மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது ; மாநில அரசும், அந்தந்த ஆலைகளும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டும்"

என்றும் மொரார்ஜி தேசாய் அக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

எங்களை இன்னும் எந்த நிலைக்கு உயர்த்தப் போகிறீர்கள்?

முதலமைச்சர் அண்ணா இடித்துரை

சென்னை, ஜூன் 4—

"எங்களைத் தூற்றினீர்கள் -- மக்கள் போற்ற ஆரம்பித்தார்கள்! நீங்கள் அடித்தீர்கள் -- மக்கள் அணைத்துக்கொண்டார்கள்! எங்களை அலட்சியப் படுத்தினீர்கள் -- மக்கள் எங்களை அரசாளும் பீடத்தில் அமர்த்தினார்கள்!

"இன்னமும் அதே காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறீர்கள்! இதைவிடப் பெரியது இருப்பதாக எனக்கு ஒன்றும் தெரியவில்லை! இன்னும் என்ன பெரிய நன்மையை எனக்குத் தருவதற்காக என்னுடைய மாற்றார்களே -- நீங்கள் இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறீர்கள்? என்று அறியாமல்தான் நான் திகைக்கிறேன்!"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், காங்கிரசுக்காரர்கட்கு வினாத் தொடுத்தார். நேற்று நடந்த அமைச்சர் கருணாநிதி அவர்களின் பிறந்த நாள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய அண்ணா அவர்கள், கருணாநிதியைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட காங்கிரசுக்காரர்களின் இழி செயல்பற்றி, திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், சி. பா. ஆதித்தனாரும் கூறியதைத் தொடர்ந்து உருக்கத்துடன் குறிப்பிட்டதாவது :—

'கருணாநிதியைத் தாக்கச் சிலர் முயற்சித்தார்கள்' என்று இங்கே சொன்னார்கள் ; இதிலே நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! அவர்கள் தாக்க முற்படாமல் இருப்பார்களேயானால்தான் நான் உள்ளபடியே ஆச்சரியப் பட்டிருப்பேன்.

ஒரு பேரறிவாளர் சொன்னார் — 'உன்னை யாருமே குறைகூறவில்லையென்றால், கொஞ்ச காலம் கவலைப்படு' மற்றவர்கள் மனத்தை உறுத்தும்படியான வகையில் விஷயத்தைச் சொல்லத் தவறிவிட்டாய் என்பதுதான் அதனுடைய பொருள்' என்று!

அதைப்போல், தி. மு. கழகம் அல்லது அதன் அமைச்சர்கள் அல்லது தலைவர்கள் அல்லது தொண்டர்கள் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள் என்றால், அவர்கள் முதலிலே கேள்விக்குறியாக இருந்தவர்கள் இன்றையத்தினம் ஆச்சரியக் குறியாக மாறியிருக்கிறார்கள்!

ஆச்சரியக் குறியாக மாறியவுடன் பலருக்கு அதனாலே அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது ; அந்தச் சூழ்நிலைக்கு மத்தியில் நம்முடைய கழகம், அரசு அமைத்து நடத்திக்கொண்டிருக்கிறது!

நாம் அரசியலிலே இருக்கவே அருகதையற்றவர்கள்—நாம் எதையுமே ஆராய்ந்து அறியாதவர்கள் என்று நம்பியவர்களும், 'நாம் எதற்கும் இலாயக்கில்லாதவர்கள்' என்று தங்களைத் தாங்களே நம்ப வைத்துக்கொண்டவர்களும் நிரம்பிய தமிழகத்தில், எதிர்க் கட்சியாக இருக்கும்போதே—அதற்குக்கூடத் தகுதியற்றவர்கள் என்ற பேசப்பட்ட நிலையில்—ஆளும் கட்சியாக மாறியது மட்டுமல்லாமல், அகில இந்தியாவில் பல்வேறு முனைகளிலும் உள்ளவர்கள் பாராட்டத்தக்கவகையில் ஒரு அமைதியான சூழ்நிலையில் அரசியலை நடத்துகிறோமென்றால், நிச்சயமாக மனித உள்ளம்—பண்பறிந்த மனித உள்ளமல்ல - சராசரி மனித உள்ளம்—அதைப் பொறுத்துக்கொள்வது மிகக் கடினம்!

சிவப்புத் துணிக்கு அஞ்சாத எருதும், எதிர்க் கட்சி அரசாள ஆரம்பித்தால் அஞ்சாத முன்னாள் ஆளும் கட்சியும், நம்முடைய நாட்டிலல்ல -- உலகத்திலேகூட இருப்பதற்கில்லை!

'அந்த ஆத்திரத்திலே செய்யப்படும் காரியங்கள் தாக்குதலிலே முடிகிறது' என்று சொல்லப்படுமானால், நான், கருணாநிதி அமைச்சரானபோது அடைந்த மகிழ்ச்சியைவிட, அவர், மாற்றாரால்--அமைச்சர் என்ற முறையிலே தாக்கப்படுவாரானால், நிமிர்ந்த நடைபோட்டு, 'என் தம்பி எதையும் ஏற்றுக்கொள்கின்றவன்' என்று சொல்லுவேன்!

நாங்கள், 'எங்கள்மீது ஈ, எறும்பு விழாது' என்று சொல்லத்தக்க அளவிலே உள்ளவர்களல்லர் ; எங்களை உருட்டிவிட்ட அழக்குப் பள்ளங்கள் ஏராளம்! நாங்கள் ஏறி இறங்கிய மலைச்சரிவுகள் நிரம்ப உண்டு! நாங்கள் கண்டு அதிலே சிக்காமல் தப்பிய சதிகள் பல சந்தித்த எதிர்ப்புகள் மிகப் பல! அவைகளுக்குப் பிறகு இன்றையத் தினம் இந்த நிலை அடைந்திருக்கிறோம் என்றால், மறுபடியும் எங்களை அதே கொடுமைக்கு ஆளாக்குகின்றவர்களை நான் பணிவன்போடு கேட்கிறேன்—இன்னும் எந்த உயரத்துக்கு எங்களை அழைத்துச் செல்ல நீங்கள் இந்தக் கொடுமை செய்கிறீர்கள்' என்று!

உள்ளபடியே எங்களுடைய அமைச்சர்களிலே யாராவது ஒருவர் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகி இறந்துபடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள் ; அவருடைய வாழ்க்கை வரலாற்றில் முற்றுப் புள்ளி வைக்கிறபொழுது, படித்து முடிக்கின்றவர் கண்ணீரோடு அதை முடிப்பாரே தவிர, 'ஆ ; செத்தானா ; பரவாயில்லை' என்று முடிப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதை நான் எடுத்துச்சொல்வதற்குக் காரணம், அப்படிப்பட்ட கலவர நிகழ்ச்சிகள், சனநாயகத்தைக் கெடுக்கின்றன என்பதிலேதான் நமக்கு இருக்கின்ற கவலையே தவிர, கருணாநிதிக்கு இது ஒன்றும் புதிதல்ல!

திராவிடர் கழகமாக இருந்த காலத்திலேயே அவர் நாடகம் எழுதிப் பல நாடகக் குழுக்களுக்கு கொடுத்தது மட்டுமல்லாமல், ஒரு நாடகக் குழுவிலும் பங்கேற்று நடித்துக்கொண்டிருந்த நேரத்தில், புதுவை நகரத்திலே நடைபெற்ற ஒரு பெரிய கலவரத்தில் அவரையும் மற்றவர்களையும் அடித்துப் போட்டு, 'இவர் செத்துவிட்டார்' என்ற எண்ணத்தாலே பாதையோரத்தில் கிடத்திவிட்டுச் சென்று வருடம் 22 ஆகிறது! அதைவிடப் பெரிய தாக்குதல் இனி யாரும் நடத்தமுடியாது!

ஆகையினால், அவைகளிலே எல்லாம் தேறிப் பிழைத்து இந்த நிலைக்கு வந்தவர்தான் கருணாநிதி என்பதை அவர் பிறந்த நாளில் எண்ணிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்-- மிகுந்த பெருமையடைகிறோம்."

திறமைமிகு தம்பிமார்களை பெற்றவன் நான்!

முதலமைச்சர் அண்ணா பெருமிதம்!

"நாவலருடைய தனித் தமிழ் நடை அழகு நமக்குக் கிடைத்திருக்காது போயிருக்குமானால், தமிழ் மொழியினிடத்திலே நமக்கு இந்த அளவு பற்றுதல் ஏற்பட்டிருக்குமா என்பது மிகுந்த ஐயப்பாட்டிற்கு உரியது!

"தான் சொல்ல விரும்பியதைச் சொல்லிக்கொண்டு வருகிறபோது கேட்கிறவர் ஒத்துக்கொள்ளுகின்ற வரையில் அதையே விடாமல் பண்ணிப் பண்ணிச் சொல்கின்ற ஒரு திறமை நண்பர் மதியழகன் மூலமாகக் கழகத்திற்குக் கிடைத்திருக்காது போயிருக்குமேயானால், 'இவ்வளவு பிரச்சினைகளை நாடு ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு நம்மாலே செய்திருக்க[illegible]' என்பது [illegible]

[illegible] நல்ல முறையிலே [illegible]ன்படுத்துகிறார்கள்!

நம்முடைய என். வி. நடராசனை எடுத்துக்கொள்ளுங்கள்; அவருடைய உழைப்பு, ஓயாத உழைப்பு! அவர், பம்பரம் போல் சுற்றுகின்ற தன்மை கொண்டவர்! அவரைப் பார்த்தவுடனே, 'இவருக்கு எதுவுமே தெரியாது' என்று யாரும் எண்ணத்தக்க அளவுக்கு இருக்கிறது அவரது தோற்றம்! ஆனால் அந்தத் தோற்றத்தோடுகூட எல்லா விவரங்களையும் அறிந்து வைத்திருக்கிற தன்மை, அவருடைய தன்மை! இது நமக்குக் கிடைத்திருக்காது போனால், எளியோர்கள் இந்தக் கழகத்தை எப்படி நம்பி [illegible] சேர்[illegible] முடியும் [illegible]ர்க்க

[illegible]

"ஆ[illegible] [illegible]மை யுள்[illegible] [illegible]சழ [illegible]ருக்கிறார்

[illegible] நாள் விழாவில்)

[illegible]கி கணக்கிட [illegible]ஷன் உதவுகிறதாம்

ஆற்றில் ஓடும் மீன்கள் எத்தனை என்று எண்ணிக் கணக்கிட டெலிவிஷன் உதவும் என்பதை, அமெரிக்காவின் நில மீசி இலாகா அணைக்கட்டு ஒன்றில் கண்கூடாகக் காட்டிவருகிறது.

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.
திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 22 (4—6—68) செவ்வாய்

பல்லாண்டு வாழ்க!

"தோன்றின் புகழொடு தோன்றுக—அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று"
—திருவள்ளுவர்

நமது பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், தமது நாற்பத்திநான்காவது வயதை முடித்துக்கொண்டு நாற்பத்தைந்தாவது ஆண்டில் எடுத்தடி வைத்திருக்கின்ருர். கொடிது கொடிது வறுமை கொடிது; அதிலும் கொடிது இளமையில் வறுமை. அவ்வறுமையில் பிறந்து—வறுமையில் சிக்குண்டு—வறுமையை எதிர்த்துப் போராடி—வறுமையைப் புறங்கண்டு வெற்றி வாகைசூடி—எங்கெங்கும் இருக்கின்ற நல்லுள்ளம் கொண்ட தமிழர்களின் இதயகமலத்தில் இடம் பெற்றிருக்கின்றவர்—இளவல் கருணாநிதி.

கொள்கை வெறியின் காரணமாகவே, தாம் கல்வி பெறுகின்ற வாய்ப்புக்கு உயர்நிலைப் பள்ளி அளவுடன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டவர் கருணாநிதி.

மேலும் அவர் கல்வி கற்பதிலே நாட்டம் செலுத்தி கல்லூரிப் பட்டமும் பெற்றிருந்தால், இன்று நமது உள்ளங்களில் உரிய இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்ற இளவலாக -- பட்டம் பெற்ற கருணாநிதி அவர்கள் இருந்திருப்பாரா என்பது, விவாதத்துக்குரிய ஒன்ருகும்.

உயர்நிலைப் பள்ளி அளவோடு அவர் தம் பள்ளிப் படிப்புக்கு நிலையான விடுமுறை அளித்துவிட்டதனால், இன்று நாட்டுக்கும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும், சிறந்த அரசியல் முறை உருவாவதற்கும், சனநாயகக் கோட்பாடு நடைபோடுவதற்கும், மக்களாட்சி முறை வேர் விடுவதற்கும் அவருடைய அறிவாற்றல்—சொல்லாற்றல்—எழுத்தாற்றல்—நடிப்புத்திறன்—கலை ஆர்வம் அனைத்துக்கும் மேலாக அவருடைய அரிய உழைப்பு, தாய்த் தமிழகத்துக்குப் பயன்பட்டிருக்கிறது; எதிர்பார்த்ததைவிட கனிசமான நல்விளைவுகளை ஈந்திருக்கின்றன.

உழைப்பு, உழைப்பு—கண்ணயராத உழைப்பு—சோர்வுக்கு இடமளிக்காத உழைப்பு—ஊண் தவிர்த்த உழைப்பு—கருதிய கருமம் கைகூடுகின்ற வரையில் உழைப்பு—இதுவே-இந்தச் சலியாத உழைப்பே, எளிய குடும்பத்தில் ஏழைக்குள் ஏழையாக நாற்பத்திநான்கு ஆண்டுகளுக்குமுன் பிறந்த எம் இளவல் கருணாநிதி அவர்களை, இன்று பொதுப்பணி அமைச்சராக—நல்லிதயம் கொண்ட தமிழ் மக்கள் அனைவரும் 'வாழ்க, வாழ்க' என வாழ்த்திக் கொண்டிருக்கும் பெறுதற்கரிய பெரும் பேற்றினைப் பெற்ற புகழ் மிக்க மக்கள் தொண்டராக ஏற்றம் பெறச் செய்திருக்கிறது.

கழகத்துக்குக் கிடைத்த விலை மதிக்கவொண்ணாத பெரும் நிதி கருணாநிதி!

அவருடைய எழுத்து, உடைந்து கிடக்கின்ற கழகத்தவரின் உள்ளத்துக்கு உற்சாகமூட்டும் சத்துள்ள உணவு! அதே எழுத்து, அரசியல் மாற்றுக் கருத்தினருக்கு உற்சாகத்தை முடக்கி -- ஊக்கத்தை ஒடுக்கி -- உள்ளத்தை சுக்குநூருக உடைத்திடச் செய்திடும் சொல்லம்பு!

அவருடைய பேச்சோ, ஆர்வம் பொங்கிவழிகின்ற பெருவெள்ளம்! அப்பேச்சு, கூட்டுத் தோழர்களுக்குப் புத்துயிர் தரவல்ல மாமருந்து! அதே பேச்சு, அரசியல் எதிரிகளின் கொக்கரிப்பைக் கொன்றிடக்கூடிய சொல் நஞ்சு!

வெற்றி தேர்தல் பணிபுரிவதில், கருணாநிதிக்கு நிகர் கருணாநிதியேதான். இத்துறையில் அவருக்கு உவமை காட்டக்கூடியவர், இன்றுவரை பிறந்திடவில்லை; இதுதான் உண்மை.

மாநகராட்சிமன்றத்தைக் காங்கிரசுக் கட்சியினிடமிருந்து விடுவித்து முதன்முதலாகக் கழகத்திடம் ஒப்படைத்ததற்குக் கருணாநிதி தந்திருக்கின்ற உழைப்பும், செயல்படுத்தி இருக்கின்ற தேர்தல் நுண்ணறிவும், வியப்பையும் திகைப்பையும் ஒருங்கே தரக்கூடியனவாகும். தேர்தல் பணிபுரிவதில் அவருக்குள்ள ஆற்றல், அறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், பரிசளிப்பையும் அவருக்குத் தேடித் தந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் உட்பட கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பதினான்குபேர்களும், காங்கிரசுக் கட்சியின் தேர்தல் சதிக்குப் பலியாகி வெற்றி வாய்ப்பை இழந்துவிட்ட நேரத்திலும், காங்கிரசின் தேர்தல் சதியை முறியடித்து—தம்மை எதிர்த்து நின்ற காங்கிரசுப் பெரும் புள்ளியை விழ்த்தி வெற்றி பெற்றவர் கருணாநிதி ஒருவர்தான் என்றால், அது அவருடைய தேர்தல் பற்றிய நுண்ணறிவுக்கும் செயல்திறத்துக்கும் எடுத்துக்காட்டு அல்லவா?

கழகத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள், திருக்கோயில்களில் வீற்றிருக்கக்கூடிய மூலவருக்கு ஒப்பானவர்; கருணாநிதி அவர்கள், திருவீதிகளில் உலா வருகின்ற உற்சவரை ஒத்திருப்பவர்; இது பற்றிய விரிவான விளக்கம், தமிழக அரசியல் பற்றி எதிர்காலத்தில் எழுதப்படுகின்றபொழுது, அவ்வரலாற்றில் இடம் பெற்றே ஆக வேண்டும். இது இடம் பெருத வரலாறு, தமிழக அரசியல் பற்றிய முழு உண்மையையும் கொண்டதாக இருந்திடாது

இளவல் கருணாநிதி, கலைஞர்—ஆசிரியர்—நடிகர்—அறிஞர்—பொதுப்பணி அமைச்சர்! அவர் தொண்டு தொடரட்டும்! அவர் உழைப்பு ஓங்கட்டும்! அவருடைய புகழ் மென்மேலும் ஒளிவிட்டுப் பரவட்டும்—நறுமணம் வீசட்டும்! அவர் வாழ்க! நலம் பல பெற்று வாழ்க! புகழ் மணம் பரப்பி வாழ்க! வாழ்க, வாழ்க—பல்லாண்டு!

—கா. க.

சமூக ரீதியில் ஒருமைப்பாடு --- பொருளாதாரத் துறையில் தன்னிறைவு ---
மத்திய - மாநில அதிகாரங்கள் நியாயமாக நிர்ணயிக்கப்பட்டால்தான்......

'சமாதானத்தை உருவாக்கும் நாடாக இந்தியா ஏற்றம் பெற இயலும்'

'உலகத்திற்கு எதையும் சொல்வதற்குமுன் முதலில் நம்மை வலிமைப்படுத்திக் கொள்ளுவது அவசியம்'

'நாட்டின் பலவீனம் எண்ணத்தின் உணர்வை சீர்குலையச் செய்துவிடும்'

முதலமைச்சர் அறிஞர் அண்ணா தந்த விளக்கமும் கருத்துரையும்

'கம்யூனிஸ்டு நாடுகளிலும் முதலாளித்துவ நாடுகளிலும் உள்நாட்டுப் பிரச்சினைகள் நிறைய உள்ளன; இத்தகைய உலகிற்கு இந்தியா, தனக்கே உரிய வகையில் என்ன செய்ய முடியும்? இது குறித்து உலகச் சுற்றுப்பயணம் முடித்துள்ள உங்கள் கருத்து என்ன?''

என்று, பம்பாயிலிருந்து வெளிவரும் 'இம்மத்' என்ற ஏட்டின் சிறப்பு நிருபர் ஆர். எம். லாலா என்பவர், முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்துக் கேட்டார்; அண்ணா அவர்கள் தந்த விளக்கமாவது :—

"உலகத்துக்கு எதையும் சொல்வதற்கு முன், நாம், முதலில் நம்மை வலிமைப் படுத்திக்கொள்ள வேண்டும். உள்நாட்டில் செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப உள்ளன. மனத்தளவில், 'நாம் உலகத்தின் முக்கிய அரசுகளில் ஒன்று' என்ற பங்கை வகிக்க விரும்பும் உணர்ச்சி இருக்கிறது; இந்த நாட்டின் பலவீனங்கள் அதற்கு ஒத்தவையாக இல்லை! நமது நாட்டின் நிலவரத்தினைக் கவனித்துவரும் போப் அவர்களை நான் ரோம் நகரில் சந்தித்தேன்; 'இந்தியா சமாதானத்தை உருவாக்கும் நாடாக விளங்கலாம்' என்று அவர் கூறினர்.

கேள்வி :—"அத்தகைய நிலையை இந்தியா என்று அடையும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?''

பதில் : —சமூக ரீதியில் ஒருமைப்பாடு ஏற்படும்போது - பொருளாதாரத் துறையில் தன்னிறைவு ஏற்படும்போது—சமஷ்டிக்கும் -- மாநிலத்துக்கும் உள்ள அதிகாரங்கள் நியாயமாக நிர்ணயிக்கப்படும்போது—இந்தியா அந்த நிலையை அடையும்."

"'இந்தியாவிலிருந்து பிரிந்து போக விரும்பவில்லை' என்று தி. மு. க. கூறுவது உண்மைதானா" என்று அண்ணாதுரையின் உள்ளத்தின் மூலம் தெரிந்துகொள்ள முயற்சி செய்தேன்;

"தி. மு. கழகம் தமிழகத்தின் தலைமையினை ஏற்று இருக்கிறது; 'இந்தி எதிர்ப்பை வைத்துக்கொண்டு இந்திய ஒற்றுமைப் பிரச்சினையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது' என்ற எண்ணம் இந்தியாவின் பிற்பகுதிகளில் நிலவுகிறதே''

என்று நான் கேட்டேன்; அதற்கு அண்ணாதுரை அவர்கள் பின்கண்டவாறு பதிலளித்தார் :—

அவர்கள் கூறும் கருத்து பிரச்சார நோக்கமுடையது!

"இத்தகைய கருத்து, வெறும் பிரச்சார நோக்கம் கொண்டது, தி. மு. கழகத்தின் நடவடிக்கைகள் — அதன் தலைவர்களின் பேச்சுக்கள்—தி. மு. கழகத்தின் அரசியலமைப்பு ஆகியவற்றை யார் வேண்டுமானாலும் அலசிப் பார்க்கலாம்; அதன்பின், அப்படிப் பார்க்கிற யாரும், 'தி. மு. கழகம், இந்திய ஒற்றுமையைக் குலைக்க நினைக்கிறது' என்று கூறவே முடியாது. இதனை நான் திட்டவட்டமாகக் கூறுவேன். சீன—பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்போது தி. மு. கழ[illegible] நாட்டுப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு உறுதியான ஆதரவை நல்கியது, சீன ஆக்ரமிப்பின்போது, நான் வேலூர் சிறையில் இருந்தேன். விடுதலையான அன்றே நடைபெற்றுவந்த கிளர்ச்சிகளை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டேன்.''

இந்திய அரசியல் சட்டம் எப்படி செயல்பட்டது?

கேள்வி :—"'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை' என்று நீங்கள் கூறுகிறீர்கள்; நீங்கள் உண்மையிலேயே விரும்புவது என்ன?''

பதில் :—"கடந்த இருபது ஆண்டுகளாக இந்திய அரசியல் சட்டம் எப்படி செயல்பட்டுவந்துள்ளது என்பதுபற்றிய சாட்சியங்களை அரசியல் சட்ட நிபுணர் ஒருவர் சேகரிக்கவேண்டும். அத்தகைய விசாரணைக் குழுதான்—இந்திய ஒற்றுமைக்கு ஊறு விளையாமல்—'மாநிலங்கள் மேலும் சுய பலத்துடன் விளங்க என்ன மாறுதல் தேவை' என்பதை வெளியிட முடியும்.

"அரசியல் சட்டத்தில், மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்கும் இ[illegible] காரங்க[illegible] பட்டிரு[illegible] பரிசீல[illegible] திரு. ச[illegible] கிருர்.

"மாநிலங்க[illegible] கின்ற சில அ[illegible] பவவாயிலாக [illegible] குச் செல்ல வே[illegible] களாக இருக்கலாம். [illegible] போல், மத்திய அரசின் [illegible] அதிகாரங்கள், மாநிலங்கட்கு வரவேண்டியவைகளாக இருக்கலாம்.''

கேள்வி :—"மற்ற முதலமைச்சர்கள் உங்களை ஆதரிப்பார்களா?''

பதில் :—"ஆம்; நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், அண்மையில் டில்லியில் கூடினர்கள்; 'அரசியல் சட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பற்றி விசாரிக்க ஒரு குழு நியமிக்க வேண்டும்' என்று அவர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த யோசனையில் பொருள் இருக்கிறது.

"தமிழ்நாட்டின் முன்னாள் தொழிலமைச்சர், ஒரு காங்கிரசுக்காரர்; மாநிலத் திட்டங்கள் பலவற்றிற்கு மத்திய அரசின் அனுமதி பெ[illegible] அவருக்[illegible]து."

[illegible] பகுதி[illegible] எதை வழங்கமுடியும்? தமிழக[illegible] இதுவரை வழங்கியது அல்லது வழங்கப்போவது என்ன?''

(4-ம் பக்கம் பார்க்க)

'அற்புதமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மனம் அவருக்கு இருந்தது'

'அவருடைய உண்மையான போக்கு சந்திக்கின்றவர்களைக் கவர்ந்துவிடும்'

"அமெரிக்கா, ஜப்பான், ஹாங்காங் ஆகிய நாடுகளில் 37 நாட்கள் சுற்றுப் பயணம் செய்துவிட்டு தமிழக முதலமைச்சர் நாடு திரும்பி இரண்டு நாட்கள் தான் ஆகியிருந்தன; நான் அவரைப் பேட்டி காணச் சென்றபோது, அவர் சிறிது களைப்புடன் காணப்பட்டார்; ஆனால் அவருடைய வழக்கப்படி—ஒன்றில் அவர் கவனம் செலுத்த ஆரம்பித்தால்—அதில் முழுமையும் ஈடுபட்டுவிடுவார். அதுபோல், எனது பேட்டியிலும் கவனம் செலுத்தினர். அற்புதமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மனம் அவருக்கு இருந்தது; அங்கிருந்து நேரடியான தெளிவான பதில்கள் வந்தன; அவருடைய உண்மையான போக்கு, சந்திக்கிறவரைக் கவர்ந்துவிடும்.

"இருபது மாதங்களுக்குமுன் அவரை நான் சந்தித்திருக்கிறேன். இப்போது காலத்தினாலும் பொறுப்புகளினாலும் அவரிடம் மேலும் முதிர்ச்சி தென்பட்டது. அவர் சிறந்த இராசதந்திரியாக விளங்கினர். புதிய கருத்துக்களை அவர் வரவேற்ருர். வெளிநாடு புறப்படுவதற்குமுன் டில்லிக்குச் சென்று தலைமையமைச்சர் இந்திராவிடம் அயல்நாட்டுக் கொள்கையைப்பற்றி விளக்கம் கேட்டார். அந்த அளவுக்கு அவர் பெருந்தன்மை படைத்தவர்.''

---ஆர். எம். லாலா
'இம்மத்' ஏட்டின் நிருபர்

தமிழகத்தில் புதிய தொழில் திட்டங்கள்

மத்திய அரசின் நிலைபற்றி அண்ணா விளக்கம்

சென்னை, ஜூன் 4—

முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்த செய்தியாளர்கள், பல்வேறு பிரச்சினைகளின்மீது கேள்விகள் எழுப்பி அவற்றிற்கு விளக்கம் கேட்டனர்.

தமிழகத்தில் புதிய தொழில் திட்டங்களை ஏற்படுத்துவது பற்றி அவர்கள் வினவினர்; அதற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'மண்வாரி இயந்திரத் தொழிற்சாலையை அமெரிக்க உதவியுடன் ஏற்படுத்துவது பற்றி மத்திய அரசு இன்னமும் முடிவு செய்யவில்லை; இறுதி முடிவு செய்யப்படுவதாக மத்திய அமைச்சர் எழுதியிருக்கிறார்' எனத் தெரிவித்தார்.

'புதிதாகப் பாலிஸ்டர் பைபர்' தொழிற்சாலையை ஏற்படுத்துவதானது ஏற்கனவே சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் பஞ்சாலைத் தொழில்களுக்கு நாசத்தை உருவாக்கும் என்று தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் கூறியிருப்பதை அவருடைய கவனத்திற்குச் செய்தியாளர்கள் கொண்டுவந்தனர்; உடனே அண்ணா அவர்கள், 'இந்தக் கருத்துப்பற்றி பரிசீலனை செய்யப்படும்; இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த 1963-ல் அப்போதைய காங்கிரசு அமைச்சரவை கூறியது; ஒருவேளை, அப்போது பஞ்சாலை நிலைமை வேறுமாதிரியாக இருந்ததாக சுப்பிரமணியம் சொல்லக்கூடும்' என்றார்.

"சாதாரண அளவிலாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை இடம்பெறும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன்" என்றும் அவர் கூறினர்; 'உங்கள் நம்பிக்கை மத்திய அரசு தந்த வாக்குறுதியின்மீதா?' என்று செய்தியாளர்கள் வினவியபோது அண்ணா அவர்கள், 'அப்படித் தெரிந்திருந்தால், நான் அதை வெளிப்படையாகவே கூறியிருப்பேன்; ஆனால், நிலைமை அப்படியில்லை, இருப்பினும், மிகுந்த நம்பிக்கையுடன்தான் இருக்கிறேன்' என்றார்.

"நமது மாநிலத்தில் தொழில்கள் அமைக்க மைசூர் அரசு செய்வதைப்போல் பல இடங்களுக்குச் சென்று தொழிலதிபர்களை அழைக்கும் முறை மேற்கொள்ளப்படுமா?" என்று செய்தியாளர்கள் வினவியபோது, அண்ணா அவர்கள், 'இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில், அந்த முயற்சியில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்' எனக் குறிப்பிட்டார். மேலும் கேட்கப்பட்ட கேள்விகளும் -- பதில்களும் வருமாறு:—

வளரும் சீர்கேடுகளில் சிவசேனையும் ஒன்று!

கேள்வி:—"பம்பாயில் சிவசேனையின் அக்கிரமச் செயல்கள் அதிகரித்து வருகிறதே?"

அண்ணா:—"நாட்டில் வளரும் சீர்கேடுகளில் அது ஒன்று; அந்தச் சேனைபற்றி இப்போதுதான் சவானும், மற்றவர்களும் வாய் திறந்து பேசுகிறார்கள்! நான் டில்லியில், 'இந்தச் சேனைகளின் இலட்சியங்கள் முதலியவற்றைப் பரிசீலனை செய்து, ஒருமைப்பாட்டுக்கும், சட்ட ஒழுங்குக்கும் அவைகள் விரோதமாக இருந்தால், அவற்றை நீக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளலாம்; வெறும் தொண்டர் படையாகவே இருக்கும் என்றால் அனுமதிக்கலாம்' என்று கூறினேன்."

கேள்வி:—"மத்திய அரசு உங்கள் யோசனைக்கு என்ன பதில் அளித்தது?"

அண்ணா:—"எனது யோசனையை அவர்கள் வரவேற்றது போல் தெரிந்தது; ஆனால் இப்போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சேனை துவக்கப்படுகிறது."

முறைகள் எங்கே?

கேள்வி:—"தாங்களும், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரும் சந்தித்துப் பேசி, இந்தக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்திற்கு முடிவு கட்டக்கூடாதா?"

அண்ணா:—"இது, காங்கிரசுக் கட்சி செய்தால் அவருடன் பேசலாம்; உள்ளூர்க்காரர்கள் செய்வதாகக் கூறுகிறார்; இனி உள்ளூர்க்காரர்களுடன் பேச[illegible] வேண்டியதுதான். கறுப்புக் கொடி காட்டுவதை எதிர்ப்பவன் அல்ல[illegible] கொடி [illegible]

[illegible]பாளர் யார்?

[illegible]ள்வி:—"தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. க. வேட்பா[illegible]ர் யார் என்று எப்போது அறிவிப்பீர்கள்?"

அண்ணா:—"இத்திங்கள் ஆறும் நாள் திருச்சியில் தி. மு. க. நாடாளுமன்றக் குழு கூடும்; அப்போது அது முடிவு செய்யும்."

கேள்வி:—"நேசமணி மறைந்ததால், இன்னொரு இடம் காலியாகிறது; அதில் காமராசர் நிற்கப்போகிறாராமே!"

அண்ணா:—"நேசமணி இப்போதுதான் மறைந்திருக்கிறார்; இதுபற்றி விரிவாகப் பேசுவது சரியல்ல!"

ஏன் செல்லவில்லை?

கேள்வி:—"காஷ்மீரில் நடைபெறும் ஒருமைப்பாடு மாநாட்டிற்குச் செல்வீர்களா? சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த என், ஜி. ரங்கா போன்றவர்கள் அங்கு செல்ல மறுத்திருக்கிறார்களே!"

அண்ணா:—"நான் அங்கு செல்வதாக இல்லை; என். ஜி ரங்கா காட்டும் காரணம் போன்றதல்ல—நான் செல்லாததற்குக் காரணம்; இங்கு எனக்கு வேலைகள் அதிகம்; எனக்குப் பதிலாக வேறு யாராவது செல்லலாம்."

கைவிடப்படவில்லை!

கேள்வி:—"அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களின் திருமணத்திற்குக் கடன் தரும் திட்டம் விரைவில் வருமா?"

அண்ணா:—"'கைவிடப்பட்டது' என்றுகூடச் சிலர் கூறுகிறார் [illegible] கை [illegible]ற்றி, [illegible]டுக் [illegible]

[illegible]றது!

[illegible]யில் விநி[illegible] நெல்லூர் [illegible]வாக இருக[illegible]

[illegible]—"அதை நாம் ஆந்[illegible]டமிருந்து வாங்குகிறோம்; இலாபமும் இல்லை — நட்டமும் இல்லை என்ற முறையில் அதை நடத்துகிறோம்; ஆகவே, விலை நிர்ணயம், அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தற்போது நமக்குத் தரப்படும் நெல்லூர்

அரிசி பழைய தரத்தில் இல்லை என்ற குறையும் இருக்கிறது."

பின்னடைய இயலுமா?

கேள்வி:—"மொழிக் கொள்கை பற்றி டில்லியில் என்ன கூறினீர்கள்?"

அண்ணா:—"நான் எனது இருமொழித் தீர்மானத்தில் உறுதியாக இருப்பதும், அதிலிருந்து பின்னடையப்போவதில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். நான் டில்லியில் தலைமையமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்தேன்; அவர்களுக்கு நான் நிறைவேற்றிய மொழிக் கொள்கை பற்றித் தெரியும்; 'ஏன் அதைச் செய்தீர்கள்' என்றோ, 'அதை மறு பரிசீலனை செய்யவேண்டும்' என்றோ அவர்கள் கேட்கவில்லை; 'கல்வி என்பது மாநில அரசின் பிரச்சினை' என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்!"

தீர்வுக்கு வழி என்ன?

கேள்வி:—"மொழிப் பிரச்சினையில் தீர்வு காண என்ன செய்ய வேண்டும்?"

அண்ணா:—"காங்கிரசுக் கட்சியின் வட இந்தியத் தலைவர்களும் தென்னிந்தியத் தலைவர்களும் கலந்து பேசி ஒரு முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும். சுப்பிரமணியம்கூட வினோபா பாவைச் சந்தித்தார் என்ற செய்தி வந்தது; என்ன பேசினார்கள் என்பது வெளிவரவில்லை."

நல்லசூழ்நிலை ஏற்பட....

கேள்வி:— "தென்னிந்திய மாநிலங்கள் ஒன்று சேர்ந்து மொழிப் பிரச்சினைக்கு முடிவு காண முடியாதா?"

அண்ணா:— "தென்னிந்திய மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கூட்டணியாகச் செயல்பட வேண்டுமானால், அது, மொழித் தீர்மானத்தை நீக்கும்படி கோருவதில் மட்டுமே இருக்கலாம். ஏனெனில், அந்த ஒரு துறையில்தான் தென்னக மாநிலங்கள் ஒன்றாக இருக்கின்றன; மற்றவைகளில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நாடாளுமன்றத்தின் மொழி பற்றிய தீர்மானம் நீக்கப்பட்டுவிட்டால், மொழிப் பிரச்சினை பற்றி விரிவாக விவாதிக்கும் நல்ல சூழ்நிலை ஏற்படும்."

மாநிலங்களில் விவசாயப் பண்ணைகள் நிறுவ டில்லி முயற்சி

தமிழக அரசு ஏற்கவில்லை

புதுடில்லி, ஜூன் 4—

நாட்டின் பல பகுதிகளில் மத்திய அரசு, 15 [illegible]தைப் பண்ணைகளை நிறுவ [illegible]ணமிட்டிருக்கிறது.

தென்னக மாநிலங்களான கேரளம், கருநாடகம் ஆகியவை தங்கள் மாநிலத்தில் விவசாயப் பண்ணைகளை நிறுவ ஒப்புதல் தெரிவித்துள்ளன.

மத்திய அரசு, சோவியத் உதவியுடன் இத்தகைய பண்ணைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கிறது.

அடுத்துவரும் ஐந்தாண்டுகளில், நெல்—கோதுமை விதைப் பண்ணைகளை சோவியத் உதவியுடன் நிறுவ உத்தேசித்திருக்கிறது; வர்த்தக ஒப்பந்தப்படி சோவியத் இரஷ்யா இதற்கான இயந்திரங்களை வழங்க முன்வந்திருக்கிறது; ஆகவே, இதற்கான யோசனைகளைக் கூறுமாறு மாநில அரசை மத்திய அரசு கேட்டிருந்தது.

தமிழக அரசும், ஆந்திர அரசும் தங்கள் மாநிலங்களில் மத்திய அரசு விவசாயப் பண்ணைகளை நிறுவ ஒப்பவில்லை.

நகராட்சித் தேர்தல்கள்

அமைச்சர் முத்துசாமி தரும் விளக்கம்

திருச்சி, ஜூன் 4—

'தமிழகத்திலுள்ள 84 நகராட்சிகளின் தேர்தல்கள் இவ்வாண்டு அக்டோபர் 31-ம் நாளுக்குள் முடிவடைந்துவிடும்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"மாநகராட்சித் தேர்தலை ஒரு திங்களுக்கு ஒத்திவைக்கவேண்டும் என்று சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டிருக்கிறது; எனவே மாநகராட்சித் தேர்தல் செப்டம்பர் இறுதியில் நடைபெறும்.

'நகராட்சித் தேர்தல்களுக்கான தேதிகள் இன்னமும் இறுதியாக்கப்படவில்லையாயினும் அக்டோபர் திங்கள் இரண்டாவது வாரத்திற்குள் நடைபெறக்கூடும்.

'நகராட்சித் தேர்தல்கள் மூன்று கட்டங்களில் நடைபெறும்; ஒரு கட்டத்திற்கும் இன்னொரு கட்டத்திற்கும் இரண்டு நாள் இடைவெளி இருக்கும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போலீசு அதிகாரிகள் செல்வதற்கு வசதியாக இந்த ஏற்பாடாகும்."

புதிய மின்னொளி பெறும் சிற்றூர்கள்

சென்னை, மே 31—

மார்ச் மாதத்தில் தமிழகத்தில் 210 நகரங்கள், கிராமங்கள் ஆகியவை மின்னொளி பெற்றதுடன், 5,092 பம்பு செட்டுகள் மின் இணைப்புப் பெற்றன.

ஏப்ரல் முதல் தேதியன்று மின்னொளி பெற்று விளங்கிய கிராமங்கள் மொத்தம் 29,269; மின் இணைப்புப் பெற்ற பம்பு செட்டுகளின் மொத்த எண்ணிக்கை 3,41,649.

லாரிகளில் கோதுமைப்பண்டம் ஏற்றிச் செல்ல அனுமதி

சென்னை, மே 31—

ஆலைகளிலிருந்து கோதுமைப் பொருள்களைக் கொண்டு செல்லும் ஒதுக்கீட்டுக்காரர்கள், தாங்களே நமூனா இருபதைத் தயார் செய்து, பொருள்களை ஏற்றிவரும் லாரியுடன் அனுப்பிவைக்கலாம்.

அந்தப் பொருள்கள் சம்பந்தமாக உரிய அதிகாரிகள் வழங்கும் வெளியீட்டு உத்தரவும் பொருள்களுடன் வரப்படவேண்டும்.

இவை சரியாகக் கடைபிடிக்கப் படுகின்றனவா என்பதைக் கவனித்து, வரியை முன்கூட்டியே செலுத்த வேண்டிய அவசியமின்றி, கோதுமைப் பண்டங்களைச் சோதனைச் சாவடிகள் வழியாகக் கொண்டு செல்லச் சோதனைச் சாவடி அதிகாரி அனுமதிக்கலாம்.

பெரியார் இயக்கத்தால் புதிய சமுதாய அமைப்பு ஏற்பட்டது

கழக ஆட்சி அமைந்ததும் தன்மானத் திருமணங்கள் சட்ட ஒப்புதல் பெற்றன

குடந்தை மணவிழாவில் அறிஞர் அண்ணா விளக்கம்

குடந்தை, மே 31—

'சுயமரியாதைத் திருமணங்களைச் சட்ட ஒப்புதல் பெற்றவையாகத் தமிழக அரசு செய்திருக்கிறது; 'இதைச் செய்யவேண்டும்' என்ற எண்ணத்திலும்தான் ஆட்சிப் பொறுப்பில் மக்கள் எங்களை அமர்த்தியுள்ளனர்.

"சமுதாயத்தில் இப்படிப்பட்ட மறுமலர்ச்சி ஏற்பட்டு நல்ல வெற்றி கண்டுவருவதில் மகிழ்ச்சியும் பெருமையும் ஏற்பட்டுவருகிறது. இனியும் யாருக்காவது இது போன்ற திருமணத்தில் ஐயப்பாடு இருக்குமானால், அது, தங்களையே சந்தேகிக்கிறார்கள் என்றுதான் பொருள்படும்"

என, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், குடந்தையில் நடந்த திருமண விழாவுக்குத தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

முரசொலி மாறனின் மைத்துனரான சம்பத்குமாருக்கும்–இரமேஷ்குமாரிக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும், முரசொலி மாறனும், வந்திருந்தவர்களை வரவேற்றனர்.

திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம், தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி, குடந்தை வட்டச் செயலாளர் பத்மநாபன், புலவர் முருகையன் எம்.எல்.ஏ, காசிராமன் எம்.எல்.எ., சின்னத்தம்பி ஆகியோர் திருமணத்தில் கலந்துகொண்டனர்.

அண்ணா அவர்கள் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பெரியார் அவர்களின் பகுத்தறிவியக்கத்தோற்றத்துக்குப் பின் தமிழ் நாட்டில் பகுத்தறிவார்ந்த புதிய சமுதாய அமைப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய தன்மானத் திருமணங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்து ஈராயிரம் ஆண்டு பழைமையானவை; திருக்குறள் வகுத்த நெறிக்கும் அவை இணக்கமானவை.

'தமிழகத்தின் புதிய அமைச்சரவை சீர்த்திருத்தத் திரு[illegible]மணங்களைச் சட்டபூர்வமானதாக்கி விட்டதால் இனி இப்படிப்பட்ட திருமணங்கள் குறித்து யாரும் ஐயப்படத் தேவையில்லை"

கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் முன்னேற்பாடு

சென்னை, மே 31—

வருகிற கல்வி ஆண்டில் புகுமுக வகுப்புக்களில் விஞ்ஞானப் பாடத்தைத் தமிழில் கற்பிப்பதற்காக இரண்டு வாரப் பயிற்சி வகுப்பு ஜூன் 8-ம் நாளன்று, மதுரையில் துவங்கப்படும் என்று தெரிகிறது.

இப்பயிற்சி வகுப்பில் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 400 கல்லூரி விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் கலந்துகொள்வார்கள்.

இப்பயிற்சி வகுப்பை ஜூன் 8-ம் நாளன்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மதுரையில் துவக்கிவைப்பார்.

இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இருப்பார்.

எண்ணத்தை வண்ணமாகப் பெற்றவர் கருணாநிதி

எத்துறையில் அவர் ஈடுபட்டாலும் சிறப்பெய்துவார்

அன்று மாணவனாகக் கண்டேன்; இன்று அமைச்சராகக் கண்டு மகிழ்கிறேன்

பாராட்டு—மலர் வெளியீட்டு விழாவில் அண்ணா

சென்னை, ஜூன் 4—

"திருவாரூரிலிருந்து ஒரு மாணவன் அனுப்பிவைத்த கட்டுரை ஒன்றை, நான் முன்பு நடத்திய 'திராவிட நாடு' வார இதழில் வெளியிட்டேன்; பின்னர் நான் திருவாரூர் சென்றிருந்தபோது, அந்தக் கட்டுரை எழுதிய மாணவனை அழைத்துவரும்படிச் சொன்னேன்; அழைத்துவந்து காட்டினார்கள்; மிகவும் மெலிந்த உருவத்துடனும் எளிய தோற்றத்துடனும் இருந்த அந்தச் சிறுவனைப் பார்த்து, 'நீ இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டேன்; 'உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கிறேன்' என்றான் அந்தச் சிறுவன்; 'நீ முதலில் நன்றாகப் படி; படித்து முடிக்கும் வரையில் கட்டுரைகள் எழுத வேண்டாம்; அதன் பிறகு எழுதலாம்; முதலில் படிப்பிலேயே கவனம் செலுத்து' என்றேன்.

"இன்று நான் சொல்வதை நூற்றுக்கு நூறும் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கும் கருணாநிதி, அன்று என் வார்த்தையைக் கேட்டிருந்தால், பல்கலைக் கழகப் பட்டம் பெற்று இப்பொழுதுள்ளதைவிட மேலும் பன்மடங்கு திறமை படைத்தவராகவும் இருந்திருப்பார். நான் இதனைக் கூறுவதால், 'கருணாநிதிக்குப் பட்டம் இல்லாததால் அவருடைய மதிப்புக் குறைந்துவிட்டது' எனச் சொல்வதாகாது; அதே நேரத்தில், 'பட்டம் தேவையில்லை' என்பதாகவும் கருதிவிடக்கூடாது.

"என் வார்த்தையைக் கேட்டவர்கள், என்றும் பழுதுபட்டவர்களாகமாட்டார்கள் என்பதற்கு கருணாநிதியே ஒரு சான்று. தம் எண்ணத்தை வண்ணமாக மிகச் சிறு வயதிலேயே பெற்றவர் கருணாநிதி"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று சென்னையில் நடந்த கருணாநிதி பிறந்த நாள் மலரை வெளியிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"பேரெடுக்க வேண்டுமானால், ஒரு நாடகம் எழுதவேண்டும்—நல்ல புகழடைய வேண்டுமானால் நான்கு புத்தகங்கள் எழுதவேண்டும்—விழா நடத்திப் பாராட்டப்பட வேண்டுமானால் பல புத்தகங்களும், கட்டுரைகளும், நாடகங்களும் எழுத வேண்டும்—என்று கருதிக் கொண்டு செய்வதால் புகழோ, பாராட்டோ கிடைத்துவிடாது; அப்படி எழுதுவதும் பயன்படாது.

'எழுத வேண்டும்' என்றால், தன் மனத்தின் உள்ளே ஏதோ ஓர் எண்ணம் இருக்கவேண்டும்; 'அதனை எடுத்துச் சொல்ல வேண்டும்' என்ற ஆவலில் எழுதவேண்டும்.

நமது கருணாநிதியின் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றி, 'அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லவேண்டும்' என்ற ஆர்வத்துடன் அவர், 'அந்த எண்ணத்தைக் கட்டுரையாக்கித் தரலாம்' என்று கட்டுரை எழுதினார்; 'கதையாகக் கூறலாம்' எனக் கதை எழுதினார்; கவிதையாக வடித்துக் கொடுக்க முயன்றார்; நாடகமாக எழுதிக் கொடுத்தார்; 'அதில், நாமே நடித்துப் பார்க்கலாம்' என்று கருதி நடித்தார்; இப்படி அவர், தமது இளமைப் பருவமுதலே, 'நாட்டுக்கு எதையாவது சொல்லவேண்டும்' என நினைத்துச் செயலாற்றினார்.

முதலில் கையாலே எழுதி கையேடு நடத்தினார்; மேடையிலே பேசினார்; கட்டுரை, கவிதைகள் எழுதினார்; நாடகம் எழுதினார்; திரைப்படங்களும் எழுதினார்; இன்று அமைச்சராக இருந்து தாம் கொண்டிருந்த எண்ணத்துக்கு எந்த அளவு வடிவம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு வடிவம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்!

கலைத் துறையில் ஈடுபாடுடைய கருணாநிதியை அமைச்சராக்கினால், அவர், 'அமைச்சருக்குரிய கடமையினை அவரால் நிறைவேற்ற முடியுமா' என்று சிலருக்கு ஐயப்பாடு இருந்தது.

கலைத் துறையில் ஒருவர் திறமையுள்ளவராக இருந்தால், அவரிடம் எந்தப் பொறுப்பை ஒப்படைத்தாலும் அதிலும் தம் திறமையைக் காட்டுவார்!

முறைபடுத்தப்படுவதுதான் கலை; ஆகவே சிறந்த கலைஞராக இருப்பவர்கள், எந்தத் துறையில் ஈடுபட்டாலும் நல்ல பயனைப் பெறுவார்கள்."

நிகழ்ச்சிகள்

கழகப் பொருளாளரும் பொதுப் பணித்துறை அமைச்சருமான மு. கருணாநிதி அவர்களின் 45-வது பிறந்த நாளை யொட்டி, நேற்று சென்னையில் மலர் ஒன்று வெளியிடப்பட்டது.

அன்னைப் பதிப்பகத்தின் சார்பில் திரு. அன்பில் தர்மலிங்கம், திரு. இளமுருகு பொற்செல்வி, திருமதி பொற்செல்வி இளமுருகு ஆகியோர் முன்னின்று நடத்திய இம்மலர் வெளியீட்டு விழா, சென்னை மவுண்ட்ரோடு பாலர் அரங்கில் நேற்று காலை 9 மணியளவில் தொடங்கியது.

வந்திருந்த அனைவரையும் மலர்க் குழுச் சார்பில் திருமதி பொற்செல்வி இளமுருகு வரவேற்றார்.

முதல் நிகழ்ச்சியாக கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கத்துக்கு, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமை வகித்தார்.

கலைஞர் கருணாநிதி அவர்களை ஒவ்வொரு கவிஞரும் ஒவ்வொரு கோணத்தில் இருந்து ஆராய்ந்து கவிதையாகப் பாடினர்.

அரங்கில் உள்ளும் புறமும் மக்கள் நிரம்பி வழிந்தனர். பிற்பகல் 1-மணிக்குக் கவியரங்கம் முடிந்தது.

திரு. கருணாநிதி அவர்களைப் பற்றி—தொண்டர், நண்பர், சொற்பொழிவாளர், எழுத்தாளர், கவிஞர், நடிகர், பாட்டாளிக்குப் பாட்டாளி, ஆசிரியர், சிறைப் பறவை, அமைச்சர்—என்னும் தலைப்புகளில் முறையே பொன்னிவளவன், மாணிக்கவாசகம், துரை நடராசன், கா. வேழவேந்தன், கதிரவன், கொத்தமங்கலம் சுப்பு, அரங்க சீனிவாசன், அப்துர் ரகுமான், முத்துலிங்கம், நடேசன் ஆகிய கவிஞர்கள் பாடினர்.

இடைவேளைக்குப் பிறகு பிற்பகல் 3-30 மணியளவில் நிகழ்ச்சிகள் தொடங்கின.

மலர்க் குழுச் சார்பில் திரு. அன்பில் தர்மலிங்கம் அனைவரையும் வரவேற்று அறிஞர் அண்ணா அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அமைச்சர்கள் செ. மாதவன், மா. முத்துசாமி, எஸ். ஜே சாதிக் பாட்சா, சுதந்தராக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எஸ். மாரிசாமி, முஸ்லிம் லீக் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. கே ஏ. அப்துஸ் சமது, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஒளவை டி. கே. சண்முகம், மாணவர் தலைவர் இரா. சனார்த்தனம், சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்கள்.

கருணாநிதி பிறந்த நாள் மலரின் முதல் பிரதியை அண்ணா அவர்களிடமிருந்து சி பா. ஆதித்தனார் பெற்றுக்கொண்டார்; இரண்டாவது பிரதியை முன்னாள் மேயர் திரு. மைனர் மோசஸ் பெற்றுக் கொண்டார்.

தோழியர் பொற்செல்வி இளமுருகு அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசியபின், அண்ணா அவர்கள் உரையாற்றினார்கள்.

இரவு 7-மணிக்கு விழா இனிது முடிவுற்றது.

விழாவுக்கு எல்லாத் தோழமைக் கட்சிகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள், கழக அமைப்புச் செயலாளர் என் வி. நடராசன், மற்றும் சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர் உட்பட நகரப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்தனர்.

சர்க்கரை

டெண்டர் அறிவிப்பு

கட்டுப்பாட்டிற்குட்படாத சர்க்கரை 1443 குவிண்டால், ஆலை வாயில் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

முத்திரையிட்ட டெண்டர்கள் 12-6-68-ம் தேதி வரை தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளப்படும்.

டெண்டரைக் காரணம் காட்டாமல் நிராகரிக்க ஆலை யாருக்கு உரிமை உண்டு.

இதர விவரங்கள் ஆலை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(ஒ-ம்) கே. பி. சீனுவாசன்,
பொது நிர்வாகி (பொறுப்பிறுப்பு)
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை,
மூங்கில்துரைப்பட்டு, (வழி) சங்கராபுரம்,
தென் ஆற்காடு மாவட்டம்.

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:—"நிலையான ஆட்சி என்பதைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் உதாரணத்தை மற்ற மாநிலங்கள் பின்பற்றலாம்.

"தி. மு. கழகத்திலிருந்து காங்கிரசுக்குப் போனதாகவோ—காங்கிரசிலிருந்து தி. மு. கழகத்திற்கு வந்ததாகவோ — இது போன்ற கட்சி மாறும் நிகழ்ச்சி தமிழகத்தில் ஒன்றுகூட நடக்கவில்லை. 'வேறு கட்சியில் சேர்ந்தால் உயர் பதவி கிடைக்கும்' என்ற நிலையில், அரசியல்வாதிகள் இருப்பார்கள். ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தபோதே நான் இதை அறிவேன், ஆனால் அவர்கள், தங்களுடைய நம்பிக்கையில் உறுதியாக இருந்தனர்.

"தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒருவகையான கட்சி விசுவாசம்—ஒருவகையான தத்துவப்பிடிப்பு—மற்ற இடங்களை விட அதிகமான அளவில் இருக்கிறது என்று கருதுகிறேன்."

திட்டங்களின் தெளிவின்மை முக்கிய காரணமாகும்

கேள்வி:—"கடந்த 15 மாத காலத்தில் தி. மு. க. அரசின் முக்கிய சாதனை என்ன?"

பதில்:—"உணவுத் துறையில் எங்கள் முயற்சிகளை நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியும், உணவு உற்பத்தியிலும், பங்கீட்டிலும் அரிசிக்கு மானியம் அளித்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வதிலும் தமிழக அரசு செய்துள்ள முயற்சிகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

"தொழில் துறையைப் பற்றிச் சிலர் கூறலாம்; அத்துறையில் சுறுசுறுப்பு சிறிது குறைவாக இருக்கலாம்; ஆனால், தொழில் மந்தத்தின் காரணமாக நாடு முழுவதற்கும் இந்த விளைவு ஏற்பட்டிருக்கிறது. திட்டங்களின் எதிர்காலம் பற்றிய தெளிவின்மையும் இதற்கு ஒரு காரணம் ஆகும்.

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 11 சதவீத உற்பத்தி உயர்வு எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் 2 சதவீதம்தான் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது."

சென்னை மாவட்டக் கழகத்தோழர்கட்கு:

"23-6-68-ல் நடைபெறவிருக்கும் வட்டக் கழகத் தேர்தல், முறைப்படி[illegible]ம் சீரிய முறையிலும் நடக்க ஒத்துழைக்கும் வகையில் கழகத்தோழர்களும், நிர்வாகிகளும், புதிய உறுப்பினர் சேர்க்கவோ, முகவரி மாற்றம் கோரியோ விண்ணப்பம் செய்யவேண்டாம் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

"29-5-68-ல் நடந்த பகுதிச் செயலாளர்கள் கூட்ட முடிவுப்படி, மேற்கொண்டு விண்ணப்பப் பாரங்களும், முகவரி மாற்றக் கோரிக்கைகளும், தேர்தலுக்குப் பிறகுதான் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் நீல நாராயணன் அறிவிக்கிறார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து மொரீஷியஸ் பயணம்

அறிஞர் அண்ணா மற்றும் அமைச்சர்கள் வழியனுப்பி வைத்தனர்

சென்னையிலும் பம்பாயிலும் சிறப்பான வழியனுப்பு நிகழ்ச்சிகள்

சென்னை, ஜூன் 4—

தமிழகச் செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், விமானம் மூலம் நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் பம்பாய் வழியாக மொரிஷியஸ் தீவுக்குப் பயணமானார்.

விமான நிலையத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களும், மற்றும் அமைச்சர்களும், மாநகராட்சி மேய[illegible]ற--நா[illegible] மன்ற உறுப்பினர்கள், தி. மு. கழகத் தோ[illegible] துறையினரும் அமைச்சருக்கு மலர்மாலை[illegible]களும் அணிவித்து வழியனுப்பிவைத்தனர்[illegible]

பம்பாயில் கழகத் தோழர்கள் வரவேற்பு

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், நேற்று மாலை 4-30 மணியளவில் பம்பாய் போய்ச் சேர்ந்தார்; விமான நிலையத்தில் தி. மு. கழகத் தோழர்களும், சார்புமன்றத் தோழர்களும் பெருவாரியாகத் திரண்டிருந்து சிறப்புமிக்க வரவேற்பு அளித்தனர்.

பம்பாய் ஆளுநர் மாளிகையில் தங்கியிருந்துவிட்டு அமைச்சர் சத்திய[illegible] இன்று பி[illegible] வில் விமான[illegible] தீவுக்குப் புற[illegible]

கூடலரசன் சுற்று[illegible]

ஜூன் 5: கட்டம்கோட்[illegible] மதுரை; 7: பாகூர்; 8: புது[illegible]; 9: அரியாங்கர்; 10: நெட்டப்பாக்கம்; 11: வில்லியனூர்; 12: கணபதிசெட்டிகுளம்; 13: முதலியார்பேட்டை; 14: கோவை; 15: குன்னூர்; 16: சோலூர் நீலகிரி; 17—24: மதுரை நகர்.

வாலாஜாவில் மகளிர் கல்லூரி

வேலூர், மே 31—

வாலாஜாபேட்டையில் பெண்கள் கல்லூரி ஜூலை முதல் நாளிலிருந்து தொடங்கும்.

விஞ்ஞானப் பாடங்கள் நீங்கலாகக் கலைப் பாடங்கள், குடும்பக் கலைப் பாடங்களுடன் கல்லூரி ஆரம்பமாகும்.

வடாற்காடு மாவட்டக் கலெக்டர் டெ[illegible]லிபப்பா நிருபர்களிடம் [illegible]க்கவலை வெளியிட்டார்.

[illegible] இலட்சம் செலவில் கல்லூரி [illegible]ப்படுவதாகக் [illegible]

திராவிட முன்னேற்றக் கழக[illegible], திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்[illegible] அவர்கள் ஆசிரியராகவும், வெளி[illegible]பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்[illegible] அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராய[illegible] செட்டித் தெரு, சென்னை-13) அச்சி[illegible] வெளியிடப்படுகிறது.